

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மேடவாக்கம் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவரும், சித்தாலப்பாக்கம் ஒன்றிய கவுன்சிலருமான ப.ரவி அவர்கள் உடல்நலக் குறைவால் இயற்கை எய்தியதையொட்டி நேற்று (23.10.2025) அவரது இல்லத்திற்கு நேரில் சென்று உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் அமைச்சர்கள் துரைமுருகன், கே.என்.நேரு, மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஜெகத்ரட்சகன், திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் முனைவர் க.பொன்முடி, அரவிந்த் ரமேஷ், தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் காமராஜ் ஆகியோர் உள்ளனர்.

### நாமக்கல் மாவட்டம் - சேந்தமங்கலம் தொகுதி

# கழக சட்டமன்ற உறுப்பினர் கே.பொன்னுசாமி மறைவு!

நாமக்கல், அக். 24 -

நாமக்கல் கிழக்கு மாவட்டம் சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் கே.பொன்னுசாமி உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டு நாமக்கல் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு நேற்று (23.10.2025 - வியாழக்கிழமை) காலை 7.30 மணி அளவில் சிகிச்சை பலனின்றி இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

கொல்லிமலை வாழவந்தி நாடு எல்லை கிராய்பட்டி பகுதியில் வசித்து வந்தவர் கே.பொன்னுசாமி. மலைவாழ் பழங்குடியினர் பிரிவைச் சேர்ந்த இவருக்கு ஜெயமணி என்ற மனைவியும், மாதேஸ்வரன் என்ற மகனும், பூமலர் என்ற மகளும் உள்ளனர்.



**அரசியல் அனுபவம்:**

2006ல் சேந்தமங்கலம் சட்டப்பேரவை தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். 2007 ஆம் ஆண்டு முதல் நாமக்கல் மாவட்டக் கழக துணைச் செயலாளராக இருந்தவர்.

இதனை தொடர்ந்து 2021 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் இதே தொகுதியில் போட்டியிட்டு சட்டமன்ற உறுப்பினராக இருந்து வந்தார்.

மறைந்த சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் - மாவட்டக் கழக துணைச் செயலாளர் கே.பொன்னுசாமி உடலுக்கு நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம், மாவட்ட ஆட்சியர் துர்கா மூர்த்தி, நாமக்கல் தெற்கு நகரச் செயலாளர் ராணா ஆனந்த், நாமக்கல் மாநகராட்சி மேயர் கலாநிதி, நாமக்கல் கிழக்கு நகரச் செயலாளர், மாநகராட்சி துணை மேயருமான பூபதி, மேற்கு நகரச் செயலாளர் சிவக்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் மலரஞ்சலி செலுத்தி மரியாதை செலுத்தினர்.

### மாநில உரிமைகளை விட்டுக் கொடுத்து – பதவியில் ஒட்டிக் கொண்டிருந்த பழனிச்சாமி

# மாநில உரிமைகளுக்காகப் போராடும் 'திராவிட மாடல்' முதல்வரை குறை கூறுவதா?

## எடப்பாடிக்கு – அமைச்சர் எஸ்.ரகுபதி கண்டனம்!

சென்னை, அக். 24 -

மாநில உரிமைகளை விட்டுக் கொடுத்து - பதவியில் ஒட்டிக் கொண்டிருந்த பழனிச்சாமி மாநில உரிமைகளுக்காகப் போராடும் திராவிட மாடல் முதல்வரை குறை கூறுவதா? என்று எடப்பாடி பழனிசாமிக்கு அமைச்சர் எஸ்.ரகுபதி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது :-

புதிய டி.ஜி.பி. நியமனம் தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி அவர்கள் முன்னாள் டி.ஜி.பி. அவர்களின் பதவிக்காலம் கடந்த ஆகஸ்ட் மாதம் நிறைவடைந்தும், இதுவரை புதிதாக டி.ஜி.பி. நியமிக்கப் படவில்லை என்றும், தங்களுக்கு ஏற்ற நபரைத் தேர்தல் நோக்கத்திற்காக நியமிக்க வேண்டும் என்பதற்காகவே இவ்வாறு காலதாமதம் செய்யப்படுகின்றது என்றும் வழக்கம்போல் அடிப்படையில்லாமல் பேசியிருக்கிறார்.

மாண்பமை உச்சநீதிமன்றத்தில் வழக்கு இருந்த காரணத்தால்தான், புதிய டி.ஜி.பி. நியமனத்திற்கான பட்டியல் ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு (UPSC) உரிய காலத்தில், அனுப்பி வைக்க



இயலவில்லை என்ற அடிப்படை உண்மையைக் கூட அவர் தெரிந்து கொள்ள முற்பட வில்லை. வழக்கு முடிந்த பின்னர் எந்தவிதக் காலதாமதமும் இன்றி அந்தப் பட்டியல் அனுப்பி வைக்கப்பட்டது என்று ஏற்கெனவே தெளிவுபடுத்தியிருந்ததையும் அவர் புரிந்து கொள்ளவில்லை.

அதன்பிறகு டிஜிபி நியமனப் பட்டியல் தொடர்பாக ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்திய கூட்டத்தில், விதிகளுக்குப் புறம்பாக சில பெயர்கள் முன்மொழியப்பட்டது குறித்து, தமிழ்நாடு அரசு தனது கடும் எதிர்ப்பைப் பதிவு செய்தது. மாநில உரிமைகளை மதிக்கும் ஒரு அரசு. பழனிசாமி போல அமைதி காக்க முடியாது.

இருப்பினும், மாநில சட்டம் - ஒழுங்குக்குப் பொறுப்பான தமிழ்நாடு அரசின் கருத்துகளை ஏற்காமல், தாங்கள் விரும்பியவர்களையே முன்மொழிந்து ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் பட்டியலை அனுப்பி வைத்தது. இந்தப் பட்டியல் தமிழ்நாடு அரசால் ஏற்கத்தக்கதாக இல்லாத நிலையில், அதற்கான காரணங்களை முழுமையாக விளக்கி, தலைமைச் செயலாளர் அவர்கள் ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்குக் கடிதம் எழுதியுள்ளார். அதற்கான பதில் இன்னும் பெறப்படாத நிலையில், "ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுததாம்" என்ற கதையாக மாநிலச் சட்டம் - ஒழுங்கைக் காப்பாற்ற வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் அறிக்கை வெளியிட்டுள்ளார். தனது ஆட்சிக்காலத்தில் ஒவ்வொரு மாநில உரிமையாக விட்டுக் கொடுத்து, பதவியில் ஒட்டிக் கொண்டிருந்த பழனிச்சாமி அவர்களிடமிருந்து வேறு எதை எதிர்பார்க்க முடியும்?

தமிழ்நாடு அரசு தனக்கு வேண்டப்பட்ட நபரை புதிய டி.ஜி.பியாக அமர்த்த வேண்டும் என்பதல்ல இங்கே உள்ள பிரச்சினை. சட்டம் - ஒழுங்கு தொடர்பாக மாநில அரசின் கருத்துக்களைப் புறக்கணித்து தனக்கு வேண்டப்பட்ட நபர்களைத் தமிழ்நாட்டில் டி.ஜி.பி.ஆக அமர்த்துவதற்கு ஒன்றிய அரசு முயலும் அடாவடிதான் புதிய டிஜிபி நியமனத்தில் தமிழ்நாடு அரசு சந்திக்கும் பிரச்சினை. ஏற்கனவே இது போன்ற பல பிரச்சினைகளில், மாநில அரசின் உரிமைகளை திராவிட மாடல் அரசு நிலைநாட்டியதைப் போன்று டிஜிபி நியமனத்திலும் மாநில உரிமைகளை நிலைநாட்ட முழுமுயற்சிகளையும் முதலமைச்சர் தலைமையிலான அரசு எடுத்து வருகிறது. அதைப் பொறுத்துக் கொள்ள முடியாத எதிர்கட்சித் தலைவர் ஏதேதோ சொல்லிப் புலம்புகிறார்.

தற்போது புதிய டி.ஜி.பி. நியமனத்தைக் குறை கூறும் பழனிசாமி, தாம் வணங்குவதாகக் கூறும் அம்மையார் ஜெயலலிதா அவர்களின் ஆட்சிக் காலத்தில் எந்த சட்டப் பிரச்சினையும் இல்லாத போதே, எத்தனை மாதங்கள், எத்தனை ஆண்டுகள் டி.ஜி.பி. இல்லாமல் அரசை நடத்தினார் என்பதை விரல் விட்டு எண்ணிப் பார்க்க வேண்டுமே தவிர மாநில உரிமைகளுக்காகப் போராடும் திராவிட மாடல் நாயகர் - முதலமைச்சர் அவர்களைக் குறை கூறுவதா?

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### சென்னை பல்கலை வளாகத்தில் 'தோழி' விடுதி கட்ட தடை கோரி மனு:

# சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது!

## வழக்குத் தொடர்ந்தவருக்கு ரூ. 10 ஆயிரம் அபராதம்!

சென்னை, அக். 24 -

தோழி விடுதி கட்ட தடை கோரிய வழக்கை, 10,000 ரூபாய் அபராதத்துடன் தள்ளுபடி செய்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தமிழ்நாடு அரசு பணிபுரியும் மகளிருக்காக குறைந்த கட்டணத்தில் அனைத்து வசதிகளையும் கொண்ட தோழி விடுதிகளை கட்டமைத்து வருகிறது. அந்த வகையில் சென்னைப் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள இராமானுஜம் கணித ஆராய்ச்சி நிறுவனத்தின் பின்புறத்தில் மாணவிகள் விடுதி அமைந்துள்ள இடத்தில், பணிபுரியும் பெண்களுக்கான தோழி விடுதி கட்டப்படும் என அறிவிக்கப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், விடுதி கட்டும் பணிக்கு தடை விதிக்கக்கோரி, பல்கலைக்கழக முதுகலை மாணவர் நவீன், சென்னை உயர் நீதிமன்றத்தில் பொதுநல மனு தாக்கல் செய்துள்ளார். அதில், விடுதி கட்டுமான பணி காரணமாக மாணவர்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்பதால், விடுதி கட்டும் பணியை கை விடக் கோரி மனு அளிக்கப்பட்டதாகவும் அதன் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மனுவை விசாரித்த தலைமை நீதிபதி எம்.எம். ஸ்ரீவஸ்தவா மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வு, இதுபோன்ற தேவையற்ற மனுக்களை தாக்கல் செய்வதை கைவிட்டு சம்பந்தப்பட்ட மாணவர், படிப்பில் கவனம் செலுத்த வேண்டுமென அறிவுறுத்தி, 10,000 ரூபாய் அபராதத்துடன் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

### சத்தியமங்கலம் பேருந்து நிறுத்தம் குடியிருப்பு பகுதியில்

# தேங்கிய மழை நீரை உடனடியாக அகற்ற நடவடிக்கை!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. அறிவுறுத்தினார்!

செஞ்சி, அக். 24 -

வடகிழக்கு பருவ மழையால் செஞ்சி மேல் மலையனூர் உள்ளிட்ட பகுதிகளில் சில நாட்களாக மழை பெய்து வருகிறது.

இந்நிலையில் நேற்று முன்தினம் வங்கக் கடலில் காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவானதை அடுத்து விழுப்புரம் மாவட்டம் செஞ்சி மேல் மலையனூர் உள்ளிட்ட பகுதிகளில் நேற்று முன்தினம் காலை முதல் விட்டு விட்டு பெய்து வந்த நிலையில் நேற்று இரவு முழுவதும் கன மழை பெய்தது.

இதனால் பல்வேறு இடங்களில் தேங்கிய மழை நீரை வெளியேற்றும் பணியில் பணியாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் செஞ்சி ஒன்றியம் சத்தியமங்கலம் பேருந்து நிறுத்தம் அருகில் உள்ள குடியிருப்பு பகுதியில் மழைநீர் தேங்கியது.

இது குறித்து தகவல் அறிந்த முன்னாள் அமைச்சர் செஞ்சி மாஸ்தான் எம்.எல்.ஏ. அப்பகுதிக்கு நேரில் சென்று பார்வையிட்டு குடியிருப்பு பகுதியில் தேங்கிய மழை நீரை உடனடியாக ஜே.சி.பி. இயந்திரம் மூலம் வெளியேற்றுவதற்கு அவர் அறிவுறுத்தினார்.

தொடர்ந்து சத்தியமங்கலம் அரசு மருத்துவமனை எதிரில் செல்லும் வடிகால் வாய்க்கால்களையும் வராக ஆற்றில் ஏற்பட்டுள்ள உடைப்புகளை பார்வையிட்டு உடனடியாக சரி செய்வதற்கு துறை சார்ந்த அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தினார்.

இதில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், நெடுஞ்சாலைத் துறை செஞ்சி உட்கோட்ட செயற்பொறியாளர் அக்பர் அலி, வட்டாட்சியர் துரைச் செல்வன், பங்கு தந்தை சிரில்,ஒன்றிய கவுன்சிலர் டிலைட், ஊராட்சி மன்ற தலைவர் அபர்ணா ரவி சங்கர், உதவி பொறியாளர் விஷ்ணு பிரியா, வருவாய் ஆய்வாளர் சத்யா, கிராம நிர்வாக அலுவலர் சரவணன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

### சாதி ஆணவப் படுகொலை தடுப்பு சிறப்புச் சட்டம்!

# முதல்வர் அறிவித்த ஆணையத்தை ஆதித் தமிழர் பேரவை வரவேற்கிறது!

## நிறுவனர் – தலைவர் அதியமான் அறிக்கை!

சென்னை, அக். 24 -

சாதி ஆணவப் படுகொலைக்கு எதிராக தனிச் சட்டம் இயற்றுவதற்கு பரிந்துரை வழங்குவதற்காக ஓய்வு பெற்ற நீதியரசர் கே.என்.பாஷா தலைமையிலான ஆணையத்தை அமைத்திட தமிழ்நாடு சட்டப் பேரவையில் முதல்வர் ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளதை ஆதித்தமிழர் பேரவை வாழ்த்தி வரவேற்கிறது என அதன் நிறுவனர் - தலைவர் அதியமான் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் சாதி மத மறுப்பு திருமணத் தம்பதிகள் தொடர்ச்சியாக சாதி ஆணவக் கொலைகளுக்கு ஆளாவதும். சாதி வெறி தாக்குதலுக்கு ஆளாவதும் தொடர்ந்து வருகிறது.

சமூகத்தில் ஒருவருக்கொருவர் கலந்துவிடக் கூடாது என்று அவர் சாதிக்குள் அவரவர் உட்பிரிவுக்குள்தான் இரத்தக் கலப்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் இல்லையென்றால் சாதிப்புனிதம் கெட்டுவிடும் என்ற அளவுகோல் திணித்து வைக்கப்பட்டிருக்கிறது.

அறிவியலுக்கு ஒவ்வாத பிற்போக்கு தனங்களால் இந்தியச் சமூகத்தில் அகமணமுறை விளங்குவதால் சாதி மறுப்புத் திருமணங்கள் கொடூரமான வன்முறைகளுக்கு இரையாகி வருகின்றது. குறிப்பாக சாதி கௌரவத்தால் பெற்ற பிள்ளைகளையே படுகொலை செய்யும் அளவிற்கு சாதிய பெருமிதம் அதிகரித்திருக்கிறது.

மேலும் தீண்டாமை வன்கொடுமைகளால் பாதிக்கப்படும் சமூகங்களாக பட்டியல் சமூகம் இருந்தாலும் கூட ரத்தக்கலப்பை ஏற்காமல் இவர்களுக்குள்ளேயே கொலை செய்யும் அளவிற்கு வன்மமும் தாக்குதலும் பெருகியிருக்கிறது. உதாரணத்திற்கு கண்ணகி முருகேசன் தொடங்கி அழகேந்திரன் வரை பட்டியல் சாதி ஆணவக் கொலையால் பலியாகியிருக்கிறார் என்பதை அறியமுடிகிறது. அதேபோல பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்



பட்ட சமூகங்களுக்குள்ளேயும் சாதி பொருளாதாரம் வேலைவாய்ப்பு பாலின வேறுபாடு போன்றவற்றையும் சுட்டிக்காட்டி ஆவணப் படுகொலைகளும் நடந்து கொண்டிருப்பது வேதனையளிக்கிறது.

சாதி ஆணவக் கொலைகள் தனி நபர்களால் அல்லது ஒரு குடும்பத்தினரால் மட்டும் நடத்தப்படுவதில்லை. கூடுதலாக சமூக நிர்பந்தம், சாதி ஆதிக்க சக்திகளின் அச்சுறுத்தல், கட்டபஞ்சாயத்து - சாதித்தூய்மை போன்ற கருத்தாக்கம் ஆகியனவும் இவற்றின் பின்புலமாக இருக்கின்றன.

ஆகவே ஏற்கனவே உள்ள குற்றவியல் சட்டங்கள் மட்டும் போதாது தனிச் சட்டம் வேண்டும் என்பதை வலியுறுத்தி ஆதித்தமிழர் பேரவை உள்ளிட்ட பல்வேறு இயக்கங்கள் போராடி இருக்கின்றன.

ஆகவே நமது அரசியலமைப்பு சட்டம் திரு மணத்திற்கான இணையை தெரிவு செய்து கொள்ளும் உரிமையை திருமண வயதை எட்டிய ஒவ்வொருவருக்கும் வழங்கியிருக்கிறது இதற்கு எதிரான படுகொலைகளையும் நிர்பந்த ங்களையும் வன்முறைகளையும் மற்றும் தாக்குதலையும் தண்டனைக்கு உள்ளாக்கும் விதமாகவும் சிறப்பு சட்டமாகவும் சாதி ஆணவக் கொலை தடுப்புச் சட்டம் நடைமுறைப்படுத்துவதற்கு ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் ஆணையம் அமைக்கப்படும் என்ற முதல்வரின் அறிவிப்பை ஆதித்தமிழர் பேரவை மனதார வரவேற்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு இரா.அதியமான் கூறியுள்ளார்.



நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக துணைச் செயலாளரும், சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினருமான கே.பொன்னுசாமி மறைவையொட்டி நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளர், நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.எல்.ஏ. அன்னாரது குடும்பத்திற்கு ஆறுதல் கூறி அவரது உடலுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அப்போது பெ.ராமலிங்கம் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சியர் துர்கா மூர்த்தி, நாமக்கல் தெற்கு நகரச் செயலாளர் ராணா ஆனந்த், மாநகராட்சி மேயர் கலாநிதி, துணை மேயர் பூபதி, மேற்கு நகரச் செயலாளர் சிவக்குமார், ஒன்றியச் செயலாளர் அசோக்குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.